

அரியலூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அமைதி பேரணியாக சத்திரத்தில் இருந்து புறப்பட்டு கடைவீதி, தேரடி, பேருந்து நிலையம் வழியாக வந்து மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.உடன் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கும்பகோணம் வலையபேட்டையில் உள்ள கலைஞர் கோட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் க.அன்பழகன் எம்.எல்.ஏ, தலைமையில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி ஆகியோர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள். கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### 4 ஆண்டுகளில் 36 அரசு கலைக் கல்லூரிகளைத் திறந்து

# கல்வியின் தேவையை நாட்டுக்குப் பறைசாற்றியவர் நம் முதல்வர்!

## மன்னார்குடியில் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் – அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!



**மன்னார்குடி,ஆக.8- "நான்காண்டுகளில் 36 அரசு கலைக் கல்லூரி களைத் திறந்து கல்வியின் தேவையை நாட்டுக்குப் பறைசாற்றியவர் நம் முதல்வர் என்று உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் கூறியுள்ளார்.**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள மன்னை இராசகோபால சாமி அரசினர் கலைக் கல்லூரியின் 39வது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் (06.08.2025) நடைபெற்றது. இவ்விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்று மாணாக்கர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது

மன்னார்குடியில் கல்லூரி இல்லாத குறையினைப் போக்கிடும் வகையில் முன்னாள் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்களின் பெருமுயற்சியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1971ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. முத்தமிழிறிஞர் கலைஞர் வழியில் தளபதி முதல்வர் அவர்களும், மன்னை மக்களின் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மூலம் அறிந்து மன்னார்குடியில் மகளிர் கல்லூரி அமைக்கப்படும் என அறிவித்து அதற்கான ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

நான்கு ஆண்டுகளில் 36 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை திறந்து கல்வியின் தேவையினை நாட்டுக்கு பறைசாற்றியவர் தமிழ்நாடு முதலமைச்சர் .

இக்கல்லூரியில் 4,587 மாணாக்கர்கள் பயிற்று வருகின்றனர். தற்போது இந்த பட்டமளிப்பு விழாவில் 3,139 மாணாக்கர்கள் பட்டம் பெற இருக்கின்றனர். இதில் மாணவியர்கள் மட்டும் 77.5% ஆகும்.

அடுப்பு ஊதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு? என்ற காலம் போய்விட்டது. சட்டங்கள் செய்யவும், பட்டங்கள் ஆளவும் இன்று பாரினில் பெண்கள் வந்துவிட்டனர். இதற்கு யார் காரணம்? தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞருமே இந்தப் பெண் விடுதலை உயர்வுக்குக் காரணம். குடும்பத்தையே பல்கலைக்கழகமாக நடத்தும் திறமை பெற்ற பெண்ணால் பொது வாழ்,விலும் சமுதாயத்திலும் வெற்றி மேல் வெற்றிகளைக் குவிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு தான், இக்கல்லூரியில் பட்டம் பெறும் மாணவியர்களின் எண்ணிக்கை உள்ளது.

1,370 மாணவியர் முதல் தலைமுறை பட்டதாரிகள். இத்தகைய பின்புலம் இருக்கும் மாணவியர் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று இருப்பது மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கிறது. இதற்கு துணையாக இருந்த அவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் உயர்கல்வி பெற எந்த தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக "புதுமைப்பெண்" கொண்டுவந்தார்கள். இதுவரை இத்திட்டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர். அதுபோல் மாணவிகள் படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பினைப் பெறவும் தொழில் முனைவோராக திகழவும் "நான் முதல்வன்" என்ற முத்தான திட்டத்தினை வழங்கினார்கள். வருடத்திற்கு 10 இலட்சம் மாணாக்கர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கதோடு தொடங்கப்பட்டது. ஆனால் மூன்று ஆண்டுகளில் 41 இலட்சம் மாணாக்கர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலான மாணவ, மாணவிகள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஒரு சாரார்களுக்கு மட்டுமே உடைமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த 'இட ஒதுக்கீடு' கோட்பாட்டின் வெற்றிதான் இது. இன்றைய தலைமுறையினர் இவற்றை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இதுபற்றிய விழிப்புணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டும். பல்லாண்டுகள் நாம் போராடிப் பெற்ற வெற்றியை இளங்கலை படிப்பிற்கே கியூட் போன்ற நுழைவுத் தேர்வுகள் மூலம் ஏழை, எளிய மாணாக்கர்களின் உயர்கல்வி கனவை பறிக்க முயல்கிறது ஒன்றிய அரசு.

(CUET) நுழைவுத் தேர்வை மட்டுமே வைத்து மாணாக்கர்கள் தரத்தை முடிவு செய்வது என்பது முற்றிலும் நயவஞ்சகமானது. இந்திய முழுவதும் ஒரே பாடத்திட்டம் இல்லாதபோது இந்தியாவிற்கான பொது நுழைவுத் தேர்வு என்பது சாத்தியமற்றது. நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் வணிக ரீதியாகவே செயல்பட்டு, மாணாக்கர்களிடம் பணத்தை பறிப்பதற்காகவே உள்ளன.

3,5,8 வகுப்பு மாணாக்கர்களுக்கு பொதுத் தேர்வு என்பது இடைநிற்றலையே ஏற்படுத்தும். தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை மாணாக்கர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது.

நீங்கள் படித்த படிப்பை சரியான சமயத்தில், சரியான முறையில் பயன்படுத்துவதில் தான் உங்கள் வெற்றியும் எதிர்கால இந்தியாவின் வெற்றியும் மனித குலத்தின் வெற்றியும் அமைந்திருக்கின்றது. இன்று நீங்கள் பெறும் பட்டம் உங்கள் வாழ்வில் புதிய வெற்றிகளை முழக்கட்டும். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 7வது நினைவு நாள் : கா.மதியழகன் ஏற்பாட்டில்

# கோவை - இடையர் பாளையத்தில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாலதி முன்னிலை! ஆர்.குமரேசன் – சோ.துரைபாண்டியன் – நா.சம்பத் பங்கேற்பு!

கோவை, ஆக. 8- முத்தமிழறிஞர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியையொட்டி இடையர் பாளையம் கா.மருதமுத்து நினைவு தி.மு.க. மன்றத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், பகுதிக் கழகச் பொறுப்பாளர் கா. மதியழகன் ஏற்பாட்டில், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளரும், மாநகராட்சியின் கல்விக்குழு தலைவியுமான மாலதி முன்னிலை வகிக்க, வட்ட கழகச் செயலாளர் ஆர்.குமரேசன், அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன், மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் மற்றும் ரஞ்சித் கமல் உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர், பெருமளவில் திரண்டு கலைஞரின் புகழை விண் அதிர முழங்கி முழக்கங்கள் எழுப்பினர்.

இன்றைய நினைவு நாளில் ஒரு ஏழை மாணவன் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான நிதியினை கழக செயல்வீரர் ரஞ்சித் கமல் வழங்கினார்.

அடுத்த நிகழ்வாக அருகில் உள்ள மாநகராட்சியின் பள்ளிக்கு கல்விக் குழு தலைவி மாலதி, மாமன்ற உறுப்பினர் சம்பத், அந்த பள்ளியில் ஆய்வினை மேற்கொண்டு அவர்கள் படிப்பதற்கும் பொது அறிவை வளர்ப்பதற்கும் ஊக்கப்படுத்தினர். மாமன்ற உறுப்பினர் சம்பத் அனைத்து ஏற்பாடுகளையும் திறம்பட செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



முத்தமிழறிஞர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவுநாளையொட்டி இடையர்பாளையம் கா.மருதமுத்து நினைவு தி.மு.க. மன்றத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில், பகுதிக் கழகச் பொறுப்பாளர் கா.மதியழகன் ஏற்பாட்டில், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளரும், மாநகராட்சியின் கல்விக்குழு தலைவியுமான மாலதி முன்னிலை வகிக்க, வட்ட கழகச் செயலாளர் ஆர்.குமரேசன், அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன், மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் மற்றும் ரஞ்சித் கமல் உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர், பெருமளவில் திரண்டு கலைஞரின் புகழை விண் அதிர முழங்கி முழக்கங்கள் எழுப்பினர்.

### ரூ.3.87 கோடி மதிப்பில்

# ஆத்தூர் கிழக்கு ஒன்றிய பகுதிகளில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் முடிவுற்றப் பணிகளையும் திறந்து வைத்தார்!

பெரம்பலூர்,ஆக,8- பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அல்லிநகரம், கீழமாத்தூர், இலந்தங்குழி, ஆதனூர், வரகுபாடி, அயினாபுரம், கொளக்காநத்தம், சில்லக்குடி ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ரூ.3.87 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கிராமப்புறங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை திட்டங்களாக வழங்கி வருகின்றார்.

இன்று ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் கீழமாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணி, இலந்தங்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் புதிய மற்றும் கூடுதல் ஒரு வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, ஆதனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் புதிய மற்றும் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, நபார்டு திட்டத்தின் கீழ் வரகுபாடி பகுதியில் ரூ.125.20 லட்சம் மதிப்பீட்டில் காரை வரகுபாடி தார் சாலையை மேம்படுத்தும் பணி, சில்லக்குடி பகுதியில்ரூ.74.10 லட்சம் மதிப்பீட்டில் சில்லக்குடி கல்லகம் செல்லும் தார் சாலையை மேம்படுத்தும் பணி, 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் சில்லக்குடி ஊராட்சி மேத்தால் கிராமத்தில், ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணிகளும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அல்லிநகரம் ஊராட்சியில் ரூ.11.78 லட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் நல மையக் கட்டடம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் கீழ் அயினாபுரம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் மற்றும் கொளக்காநத்தம் ஊராட்சி இருளர் தெருவில் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் நல மையக் கட்டிடம் என மொத்தம் ரூ.57.93 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 3 புதிய திட்டப்பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று கடந்த நான்காண்டுகளில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், எண்ணற்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ் இ.ஆ.ப., மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், முன்னாள் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவரும் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளருமான என்.கிருஷ்ணமூர்த்தி,

ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயபால், பிரேமலதா, ஆலத்தூர் வட்டாட்சியர் முத்துக்குமரன். ஆலத்தூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பூமா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் 64 இடங்களில் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அன்னதானம் வழங்கப்பட்டது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ கரூர் அன்பு கரங்கள் இல்லத்தில் காலை உணவு வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு.பெ. நீலகண்டன்
### ஆகஸ்ட் 8 (1999)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, இளமைக் காலம் முதல் கழகத்தில் உறுப்பினராகி, ஆழ்வார்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**நான்கு முறை வட்டக் கழகச் செயலாளராகவும், வட்ட அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**